செ.வெ.எண்.29 நாள்.10.04.2017.

**திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், பூலாங்குளத்தில் மத்திய, மாநில அரசு நிதியுதவியுடன் அரிசி ஆலை குழுமத்தின் பொது வசதி மையத்தின் – சாரல் அக்ரோ புராடெக்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தவிட்டிலிருந்து சமையல் எண்ணெய் தயார் செய்யும் ஆலையினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.**

-------

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், பூலாங்குளத்தில் மத்திய, மாநில அரசு நிதியுதவியுடன் அரிசி ஆலை குழுமத்தின் பொது வசதி மையத்தின் – சாரல் அக்ரோ புராடெக்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தவிட்டிலிருந்து சமையல் எண்ணெய் தயார் செய்யும் ஆலை திறப்பு விழா இன்று (10.04.2017) நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்ட நெல் தவிட்டிலிருந்து சமையல் எண்ணெய் தயார் செய்யும் ஆலையை திறந்து வைத்தார்கள்.

விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது–

ஆலங்குளம் வட்டத்தில், மத்திய, மாநில அரசு நிதியுதவியுடன் நெல் தவிட்டிலிருந்து சமையல் எண்ணெய் தயார் செய்யும் ஆலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. அரிசி ஆலை குழுமத்தின் பொது வசதி மையத்தின் மூலம் மாநில அரசு நிதி 5 சதவீதமும், மத்திய அரசு நிதி 67.48 சதவீதமும், 20 நபர்களின் நிதி 21.07 சதவீதமும், 1.45 சதவீதம் வங்கிக் கடன் என மொத்தம் ரூ.690.58 இலட்சம் மதிப்பில் இந்த ஆலை இன்று தொடங்கப்பட்டுள்ளது. விவசாயம் சார்ந்த மூலப்பொருட்களை கொண்டு இந்த நிறுவனம் இயங்குவதால் விவசாயிகள் பயன் பெறுவார்கள். இதுபோன்ற விவசாயம் சார்ந்த தொழில்களை ஊக்கப்படுத்தும் வகையில் பல தொழிற்சாலைகளை திருநெல்வேலி மாவட்டத்தில் தொடங்கி வேலை வாய்ப்புகளை அதிகரிக்க முன்வர வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்கள்.

இவ்விழாவில், சாரல் அக்ரே புராடெக்ட் பிரைவேட் லிட்., இயக்குநர் திரு.கே.ஆர்.பால்துரை, மத்திய அரசு தொழிலாளர் ஆணைய தென்மண்டல இயக்குநர் திரு.முத்துவேலப்பன், IES, டிக் பொது மேலாளர் திரு.குணசேகரன் மற்றும் அலுவலர்கள், விவசாயிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.